museum of modern
and contemporary art
sri lanka

## Quarterly Newsletter #9 – October 2024

நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம (MMCA இலங்கை) எமது புதிய கண்காட்சியான ‘முழு நில அமைப்பு’ ன் சுழற்சி ஒன்றினை செப்டம்பர் மாதம் 12 ம் திகதி ஆரம்பித்தது. சந்தேவ் ஹன்டி, தினல் சஜீவ ஆகியோரால் எடுத்தாளப்படும் இக் காண்காட்சி பொதுமக்களுக்காக கட்டணம் அறவிடப்படாது இடம்பெறும். டிசம்பர் 1 ம் திகதி முடியவுள்ள ‘முழு நில அமைப்பு’ கண்காட்சியின் சுழர்சி 1 னைப் பார்வையிட கிரெஸ்கெற் பூலவாடின் முதலாம் தளத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்திற்கு வாருங்கள்!

‘முழு நில அமைப்பு’ கண்காட்சியானது இலங்கையின் நில அமைப்பு எவ்வாறு பரந்து விரிந்து சுவாரஸ்யமான விதங்களில் மாற்றப்பட்டுள்ளது என்பதை ஆராய்கின்றது. இக் கண்காட்சியில் பாரம்பரிய முறையில் நிலத்தோற்றத்தை காட்சிப்படுத்துவதை கடந்து புதிய முறையில் காட்சிப்படுத்தும் 29 சமகால கலைஞர்களின் படைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவர்களின் படைப்புகள், நிலத்தைப் பற்றிய கண்ணோட்டங்கள் எவ்வாறு கட்டியமைக்கப்பட்டுள்ளன மற்றும் விவாதிக்கப்படுகின்றன என்பதை உள்ளடக்கியுள்ளன. ‘முழு நில அமைப்பு’ எனும் கண்காட்சியானது நிலத்துடன் எமக்குள்ள உறவை முழுமையாக மீள நோக்க உந்தி மாற்றியமைக்கும் கலைப்படைப்புகளைக் கொண்டுள்ளது.

எமது இளைய பார்வையாளர்களுக்காக ஒக்டோபர் 5-6 வரை சிறுவர்தின வார இறுதி நிகழ்வினை நடாத்தினோம். எடுத்தாளுநர்களின் இந்த உலாக்கள், பயிலரங்குகள் மற்றும் சிறுவர் செயற்பாட்டு அமர்வுகளில் 60 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றினர். கொண்டாட்டத்திற்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வகையில் க்ரெஸ்கெற் பூலவாடின் வரவேற்புத் தளமானது முக வர்ணம் தீட்டல், நெல் ஆர்ட், பஞ்சுமிட்டாய் என ஆரவாரக் களைகட்டியது.

MMCA இலங்கையின் சிரேஸ்ட எடுத்தாளுனர் சந்தெவ் ஹன்டி ஐக்கிய இராச்சியத்தில் நிகழும் ‘Art Exchange: Moving Image’ நிகழ்வில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். உப சஹாரா ஆபிரிக்க மற்றும் தெற்காசியவில் உள்ள கட்புலக் கலைகளில் ஈடுபடும் ஆரம்ப, இடைநிலைப் பணி எடுத்தாளுனர்களுக்காக என வடிவமைக்கப்பட்டுள்ள இந் நிகழ்ச்சித் திட்டமானது பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவுடன் நகரும் பிம்பங்களில் ஈடுபடும்

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

கலைஞர்களை ஆதரித்து, ஊக்குவிக்கும் ஐக்கிய இராச்சிய அமைப்பான லக்ஸ் மற்றும் தெற்காசிய கலைச் செயற்திட்டம் (ASAP) ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சமகாலக் கலைஞர்களான இறுஷி தென்னக்கோன், சுமேத கெலெகம மற்றும் சுமுது அத்துகோரள ஆகியோரால் எமது முந்தைய கண்காட்சியான ‘88 ஏக்கர்கள்’ க்கு என விசேடமாக நியமிக்கப்பட்ட ‘is this an architectural documentary?’ (2023) படைப்பானது உலக நினைவுச் சின்ன நிதியத்துடன் இணைந்து விக்டோரியா மற்றும் அல்பேட் அருங்காட்சியகத்தில் செப்டெம்பர் 11 ம் திகதி திரையிடப்பட்டது. திரையிடலைத் தொடர்ந்து விக்டோரியா மற்றும் அல்பேட் அருங்காட்சியகத்தின் கலை, கட்டக்கலை, புகைப்படம், மற்றும் வடிவமைப்பு பேணுகையாளரான கலாநிதி க்றிஸ்டோஃபர் டேனர் மற்றும் கட்டடக்கலைஞரும் கௌண்டர்ஸ்பேஸ் ஸ்தாபகரும் அதிபருமான சுமயா வலி ஆகியோருக்கு இடையில் குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

செப்டெம்பர் மாதத்தில், MMCA இலங்கையின் ஸ்தாபக புரவலர்கள் ஹொங்கொங்கில் இடம்பெற்ற எடுத்தாளல் கலை உலாவில் கலந்து கொண்டனர். கட்புலக் கலாச்சாரத்தில் ஏஷியாவின் முதலாவது சர்வதேச அருங்காட்சிகயமான எம்+ ன் பணிப்பாளர் சுஹன்யா ரஃபேல் ஒழுங்கு செய்த விசேட உலாவுடன் இது ஆரம்பமானது. அங்கு M+ Patrons, Asia Art Archive, மற்றும் Para Site ஆகியவையும் ஸ்தாப புரவலர்களைக் கவனித்துக் கொண்டார்கள். Tai Kwun Contemporary, Hauser & Wirth, David Zwirner மற்றும் Center for Heritage, Art, and Textile (CHAT) ஆகியோரும் அவர்களை வரவேற்றனர்.

இறைச்சியில்லா திங்கள் இலங்கை மற்றும் எதிகல்எக்ஸ் உடன் இணைந்து நவம்பர் 2ம் திகதி அன்று பாற்பொருளும் அற்ற சைவ உணவு பொப் அப் ஒன்றினையும் நாம் நாடாத்தினோம். கொழும்பு 3 ல் அமைந்துள்ள க்ரெஸ்கெற் பூலவாடின் லொபியில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பொப் அப் ல் அமைந்திருந்த இச் சூழலியல் விழிப்புணர்வு கொண்ட உள்ளூர் கடைகள், நிலத்துடனான தொடர்பினை ஊக்குவிக்கும் சமூக ஈடுப்பாட்டை மேம்படுத்தும் வகையில் அமையும் MMCA இலங்கையின் அர்ப்பணிப்பான சேவையையும் நிலையான வழிகளில் எமது வாழ்க்கை முறைத் தெரிவுகள் குறித்து நாம் மீளச் சிந்திக்க வேண்டியதன் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில் பாற்பொருட்களுமற்ற சைவ உணவுப் பொருட்களின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதாக அமைந்தன.

**ஆரம்ப கிறிஸ்துமஸ் பரிசுகள்**

இந்த கிறிஸ்துமஸில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் இருக்கும் பதிப்பு சரோன்கள் மற்றும் தாவணிகளை பரிசாக வழங்குங்கள்! Selyn மற்றும் MMCA இலங்கையினால் உருவாக்கப்பட்ட தனித்துவமான இந்த கையால் வடிவமைக்கப்பட்ட துணிகள் இரண்டு ஜோர்ஜ் கீட்டின் (1901-1993) ஓவியங்களால் செல்வாக்குப் பெற்றவை.

அனைத்து கலை ஆர்வலர்களுக்கும் இவற்றை விட, உங்களுக்கோ அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுக்கோ சிறந்த கிறிஸ்துமஸ் பரிசுகள் எவையாக இருக்கமுடியும்? உங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் தாவணி அல்லது சரோங்கை கொள்வனவு செய்ய, MMCA இலங்கையின் Instagram பக்கம் அல்லது Facebook பக்கம் facebook.com/mmcasrilanka/ இல் நேரடி செய்தியை அனுப்பவும்.

'இரண்டாவது தொகுப்பு: மினெட் டி சில்வாவின் வடபுழுவ வீட்டுத் திட்டம்' ஐ அருங்காட்சியகத்திலும் இன்ஸ்டக்ராம், முகப்புத்தகத்தின் ஊடாகவும் கொள்வனவு செய்யலாம். பெங்களூரில் வசிக்கும் நியா தண்டபாணி வடிவமைத்து, சாமினி பெரெரா மற்றும் கௌமதி ஜயவீர ஆகியோரால் தொகுக்கப்பட்ட இவ் வெளியீடானது கட்டடக்கலை ஆர்வலர்களுக்கு உகந்த பரிசு ஆகும்!

இரண்டாம் பாகத்தின் உருவாக்கத்தின் போது மீந்த கடதாசிகளில் உருவாக்கப்பட்ட குறிப்புப் புத்தகத்தை அல்லது புத்தகங்களை வாரி எடுத்துக் கொள்ள மறக்க வேண்டாம்.

இதன் தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயர்ப்புகளை எமது வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.